அதுமட்டுமின்றி, வேலூரிலிருந்து அனைவருமே அங்கு ஒரு சிறப்பான நிலையில் வருகை தந்து அனைவரும் கண்டு மகிழக்கூடிய ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. இதனை மேலும் விரிவு செய்யும் வகையில் பல மிருகங்கள், பல மிருகக் காட்சிச் சாலைகளிலிருந்து கொண்டு வரப்பட்டு அங்கு சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுமா? அதேநேரத்தில் அங்கு பெரிய நீர்வீழ்ச்சி போல ஒன்று இருக்கிறது, அங்கு மக்கள் சென்று குளித்து வருவதற்கும் ரூம்கள் கட்டிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் காட்டிலுள்ள மிருகங்களுக்கு கோடைக் காலங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க காட்டில் ஆங்காங்கே சிறு ஓடைகள் ஓடும் பகுதியில் ஓடைகளுக்குக் குறுக்கே தடுப்பு அணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பகுதியில் காட்டிலுள்ள மான்களுக்கு என புல், தளை இவைகள் உற்பத்தி செய்ய தீவனப் பண்ணை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ஒரு தகவல் மையமும், ஒரு நூலகமும் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. அதைத் தவிர்த்து நம்முடைய வண்டலூரில் மிகப் பெரிய ஒரு மிருகக் காட்சிச் சாலை இருக்கிற காரணத்தால் அதற்கு மேல் செய்வதற்கு போதிய வசதிகள் இல்லை என்பதும், எந்த வசதிகள் செய்ய வேண்டுமானாலும் மத்திய அரசினுடைய சில சட்டத் திட்டங்களுக்கு ஏற்ப தான் செய்ய இருக்கிற காரணத்தால் அதனுடைய அடிப்படையில் செய்ய வேண்டும். அப்படி செய்வதாக இருந்தால் இங்கே இருக்கிற நிதி நிலைமை போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு 2.1 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது போன்று இந்த ஆண்டும் அங்கு சராசரியாக 2 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய வசதி இல்லாதது தான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 353, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. மா. சா. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

353—

சமூக நலக்காடுகளைப் பாதுகாக்க கிராம வனக்குழு அமைத்தல்.

***21697–** திரு. கே. கந்தசாமி :* மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலக்காடுகளைப் பாதுகாக்க கிராம அளவில் கிராம வனக்குழு அமைக்கப்படுகிறதா?

1994 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாடுகள் பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். இக்குழுக்களுக்கு கிராம மக்கள் வன மன்றம் எனப் பெயர்.

(ஆ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் இடைபடுகாடுகள் வளர்ப்பதற்கென இக்குழு அமைக்கப்படுகிறது. திட்டமிடுதல், வளர்த்தல், பேணிப் பாதுகாத்தல், விளையும் பயன்களில் பங்கு பெறுதல் ஆகியவற்றில் இவைகள் நேரிடையாக ஈடுபடும்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனக் குழு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இசைவு தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அந்த வனக் குழுவிலே உறுப்பினர் ஆவதற்கான தகுதிகள் என்னென்ன என்பதையும், அந்த வனக் குழு உறுப்பினர்களுடைய பணிகள் எவை எவை என்பதையும், அந்தக் குழுவின் உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட காலக் கட்டங்களில், கிராம ஊராட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் இக்குழுக்களின் தலைவர்களாகவும், ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் இக்குழுக்களின் உறுப்பினர்களாகவும் இருந்து வந்தனர். ஆனால், அவர்களுடைய செயல்பாடுகள் சரியாக இல்லை என்பதை இந்த நிதி உதவி செய்கிற சிட்டா நிறுவனம் தெரிவித்த காரணத்தால் மற்றும் ஊராட்சித் தலைவர்கள் இல்லாத காரணத்தாலே அது மாற்றியமைக்கப்பட்டு, இப்பொழுது அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டும், அங்கு இருக்கிற பாரஸ்டரை மன்ற செயலாளராக வைத்தும் செயல்படுத்தப்படுகிறது. இதனுடைய அடிப்படையில் இதற்கு உறுப்பினர்கள் இத்தனை என்கிற உறுதியான கட்டுப்பாடு எதுவும் இல்லை. ஆனால் இதனுடைய எண்ணம் என்ன என்று சொன்னால் வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும், அந்தப் பகுதியிலே இருக்கிற கிராம மக்கள் வனங்கள் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதும்தான். அதற்கு மாறாக அவர்கள் வனப் பகுதிக்குள்ளாக செல்லாது, அந்தப் பகுதியில் அவர்களுடைய தேவைகளை ஈடு செய்வதற்காக இந்த வன மன்றங்கள் அமைக்கப் படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1994 ஏப்ரல் 22*
முற்பகல் 10.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 354, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

354–

தமிழகத்திலுள்ள திரையரங்குகளில் ஆபாச திரைப்படங்களைத் திரையிடுவதைத் தடுத்தல்.

***9908 –** திரு. டி. சுதர்சனம் :*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்திலுள்ள திரையரங்குகளில் விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் மிகவும் ஆபாசமான ஆங்கிலம், மலையாள மொழித் திரைப்படங்கள் வெளி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் நியமிக்கப்படுகிற தணிக்கைக் குழிவினரால் காட்சிக்குத் தகுதி வாய்ந்தது என்று சான்றிதழ் வழங்கப்பட்ட படத்தைத் தவிர வேறு எந்தப் படத்தையும் திரையரங்குகள் திரையிடக் கூடாது. மேற்படி நிபந்தனையை மீறி, ஆபாசமான படங்கள் திரையிடும் உரிமதாரர்கள்மீது, உரிமம் வழங்கும் அலுவலர்கள் தமிழ்நாடு திரையரங்கு (ஒழுங்குமுறை) சட்டம் 1955-ன் பிரிவு 9(2) (பி)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொண்டு, உரிமத்தினை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நிறுத்தம் செய்து ஆணை பிறப்பித்து வருகின்றனர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபோது, விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில், மிகவும் ஆபாசமான படங்கள் ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் திரையிடப்படுவதைத் தடுப்பதற்கு மத்திய அரசினுடைய சென்சார் போர்ட் இருக்கிறது என்று கூறினார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில மொழிப் படங்கள் திரையிடப் படுகின்றபோது, எந்தப் படத்தை திரையிட வேண்டும், எந்தப் படத்தை திரையிடக் கூடாது என்பதற்கான சென்சார் போர்டை மாநில அரசு தான் நியமிக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இந்த அவையிலேயே கொண்டு வந்து, இனிமேல் அப்படிப்பட்ட திரைப்படங்களைத் திரையிடுவதையும், ஆபாசம் நிறைந்த போஸ்டர்கள் ஒட்டுவதையும்